

11வது ஞானச்சாரியார்

# 12வது ஞானச்சாரியார்

## ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்

## அவர்களின் எழுத்துக்கள்





12வது ஞானச்சாரியார்

**பங்குனி மாத வெளியீடு**

**பதினெண்சித்தர்கள் வகுத்தளித்த மெய்யான இந்துமத ஆண்டு 43,73,113**

**உள்ளுறைத் தலைப்பு**

# சைவ சமயமே சித்தர் நெறி! அதுவே இந்துமதம்.

## ஆசிரியர்: 12வது ஞானச்சாரியார், குருதேவர், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள்.

1974இல் குருதேவர் எழுதிய நெடிய கட்டுரை அஞ்சலின் ஒரு பகுதி.

தமிழ் இலக்கியங்களின் அடிப்படையில் தமிழர் சமயம் பற்றிய ஆய்வுக் கட்டுரை இது. இதில் தமிழர் எப்படிப்பட்ட மத வாழ்வு வாழ்ந்தனர் என்பதைத் தெளிவாக உள்ளங்கை நெல்லிக்கனி போல தமிழ் இலக்கியங்களிலிருந்தே அறிய வழிகாட்டுகிறார் குருதேவர். தமிழ் ஆய்வாளர்களும், அறிஞர்களும் இன்றைய சமுதாயக் கண்ணோட்டத்திலிருந்து விலகி நின்று தமிழ் இலக்கியங்களை ஆழப் படித்தால் புரிந்து கொள்ளும் வண்ணம் அழகாக விளக்கப்படுகின்றது.

இந்தக் கட்டுரையின் தொடர்ச்சி அடுத்த இதழில் காணலாம்.

www.gurudevar.org
Email: indhuism@gmail.com
Cell: 9972130609

**தமிழ்மொழிப் பற்றும், தமிழர் நெறியான இந்துமதப் பற்றும் உள்ளவர்களுக்கு அனுப்பப்படும் சுற்றறிக்கை. இதை நகலெடுத்துத் தமிழ் தெரிந்த அனைவருக்கும் படிக்கக் கொடுக்கவும்.**

# “சைவ சமயமே சித்தர் நெறி; அதுவே இந்துமதம்.”

ஆசிரியர்:- ‘குருதேவர்’

நகல் எழுதியது:-

அன்பு சித்தர்மகன், சித்தரடியார்,
சித்தர்பதிலி சோ.இரவீந்திரன் 17/06/1988.

To

உயர்திரு பெ.க.வேலாயுதம், தமிழ்த்துறை
அரசினர் கலைக்கல்லூரி, மேலூர், மதுரை மாவட்டம்.

எல்லையில்லா ஆர்வமிகு நண்ப!

அன்புடையீர்! நலம்! நலமறிய அவா! தங்களோடு களித்துக் கழித்த சில நாட்கள் மிகவும் பயனுடையவை. சுவையுடையவை.

தங்களின் அன்பும் ஆர்வமும்தான் என்னை மேன்மேலும் உழைக்கத் தூண்டுகின்றன. என் கற்பனையும் கனவும் நடைமுறை உலகுக்கு வந்துள்ளன.

இனிய நண்பா! நீ, என்றென்றும் என் உணர்வு விளக்கெரியத் தூண்டுகோலாக இருக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

உன் நட்பைப் பெறற்கரிய பெருநிதியாகக் கருதுகிறேன். இறைவனின் அன்புப் பரிசுகளில் நீயும் எனக்கொன்று. ... ... ...

நண்பா! எவ்வளவுதான் தமிழரின் விரிந்த மனம் தங்களின் சிதைவும், அழிவும் பிறரைச் செழிக்க வழி வகுத்தாலும் பிறரின் மனம் மாறுவதே இல்லை. இந்தத் திருநாட்டில் ஒரு கூட்டத்தார் இன்னும் கி.பி. 8ஆம் நூற்றுண்டுக்குப் பிறகு பிறந்த சங்கரரை ஆதிசங்கரர் என்றும்; அதையடுத்துத் தோன்றிய இராமானுசரையும், மத்வரையும் இந்துமதக் காப்பாளர்கள் என்றும் பேசியே வேற்றுமையை வளர்த்து வருகின்றது. இவற்றின் வேற்றுமை உணர்வால், பிரிவு மனப்பான்மையால், இனவெறியால், குறுகிய புத்தியால்தான் இந்தியத் துணைக்கண்டம் முழுதும் செழித்தோங்கிக் கடல் கடந்தும், மலை கடந்தும் பரவி வலிமையுற்றிருந்த சித்தர்நெறி (தமிழர் மதம்) பொலிவிழக்க நேரிட்டது. அது, இத் திருக்கூட்டத்தைப் பிறரின் ஏளனத்துக்கும் தாக்குதலுக்கும் உள்ளாகி தடுமாறச் செய்து விட்டது; இன்னும் சொல்லப் போனால், சித்தர்நெறி என்னும் பெரிய ஏரியில் தோன்றிய மீன்கள்தான் சங்கரர், இராமானுசர், மத்வர் போன்றவர்கள். ஓர் இனவெறிக் கூட்டம்; இம்மூவரையும் தண்ணீரை விட்டு வெளியேற்றி தரையில் வாழவைக்கத் திட்டமிட்டுச் செய்த முயற்சிதான்; இன்று மூன்றுமே துடிதுடிக்கின்ற இறுதி நிலையை எய்தியமைக்குக் காரணம்.

நண்பா; நான் சங்கரர், இராமானுசர், மத்வர் ஆகிய மூவரையும் பற்றி மதிப்புக் குறைவாகவோ! அருட்திறக் குறைவாகவோ எப்பொழுதும் நினைத்ததில்லை. அப்படி நான் நினைக்கவும் முடியாது. ***சித்தர்நெறி படைத்திட்ட கோயில்களையும், ஆலயங்களையும் வழிபட்டவர்களே முன் கூறிய மூவரும். சித்தர்கள் வகுத்த தெய்வீகக் கலைகளில் பயிற்சி பெற்றுத் தேர்ந்தவர்களே யாவார்கள். இருப்பினும், இவர்கள், தங்களுடைய விருப்பு வெறுப்புகளுக்கேற்பச் சிலவற்றை ஒதுக்கியும், சிலவற்றைப் பதுக்கியும், சிலவற்றைப் புதுக்கியும் செயல்பட்டார்கள். அதாவது, இவர்களுடைய மனித மனத்தால்; இவர்கள் சித்தர்நெறி யெனும் கடலிலிருந்து; அதில் வந்து சங்கமமாகும் சிற்றூற்றின் வழியாக ஏறி வந்து அருகேயுள்ள கிணற்றுக்குள் தாவி விழுந்து கிணற்றுத் தவளைகளாக ஆகிவிட்டன. இந்தக் கிணற்றுத் தவளைகள், சித்தர்நெறியெனும் மாக்கடலில் இருந்து வந்தவைகள்தான். அதனுல், இவைகளை எப்படிக் குறைகூற நேரிட்டாலும்; அது சித்தர்நெறிக்குக் குறையாகுமே என்பதை எண்ணிப் பார்க்க வேண்டி யிருக்கின்றது. அதுவும், யாம், பீடாதிபதியாக***

***வந்துள்ள காலத்தில் கிணற்றுத் தவளைகளின் குறுகிய பயண எல்லைகளை யெல்லாம் மாற்றி யமைத்துச் சித்தர்நெறி யெனும் கடல்பரப்பின் பயண எல்லைகளை விளக்கமாக விரித்துரைக்க வேண்டியிருக்கிறது.***

ஏனெனில் இந்த உலகில் முதலில் அருவமாகவே உயிர்கள் தோன்றின; அதன்பிறகே, பல்வேறு உருவங்கள் தோன்றின; இறுதியாகவே மனித உயிர்களும் உடல்களும் வளர்ச்சி பெற்று உலவ ஆரம்பித்தன. அந்த நிலையில்தான் பதினெண்சித்தர்கள், இம்மண்ணுலகில், தங்களின் பீடத்தை நிலையாக நிறுத்தினார்கள். அப்படி யவர்கள், நிலைநிறுத்தும் முன், இம்மண்ணுலகில் முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத்தெட்டாயிரம் கோடி இயக்கர்கள் (இருடிகள், கந்தர்வர்கள்), ஆயிரம் கோடி தேவதைகள்... முதலிய பல அருவங்களைக் கொண்டே ('Spirits', Physical bodyless Deities) ஆட்சி செய்திட்டார்கள்.

அதற்குப் பிறகுதான் பதினெண்சித்தர்கள், மனித உடலில் சித்தர் இனத்தவர் பிறப்பெடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுக் காலப்போக்கில் நவகோடி சித்தர்கள், நவநாத சித்தர்கள், நான்மறைச் சித்தர்கள், தவ சித்தர்கள், வேத சித்தர்கள், வேள்விச் சித்தர்கள், ஞான சித்தர்கள்... முதலியோர் மூலம் மண்ணுலக ஆட்சியை ஒரு நிலைக்குக் கொண்டு வந்தார்கள். அதன்பிறகு, மனித உடலில் இருந்த இந்தச் சித்தர் இனத்தவர் அருவ உடலில் இருக்க விரும்பிய காலத்தில்; மனித இனமும் சித்தர் இனமும் கலந்த 'பத்தியார்', 'புத்தர்', 'போத்தர்', 'முத்தர்', 'முத்தியார்', 'சீவன்முத்தர்', சீவன்சித்தியார்', ... என்ற எட்டு வகை இனம் உருவாக்கப்பட்டு; இவற்றின் மூலம் இம்மண்ணுலக ஆட்சி நிலைநிறுத்தப்பட்டது. இந்த எட்டு வகை அருளாட்சி அலுவலர்களுக்கும் அலுவலகங்களாகச் சித்தர்களால் உருவாக்கப்பட்டவைதான் கோயில்கள். இந்த எட்டு அலுவலாளர்களுக்கும் ஊதியம் கொடுக்கும் தலைமை அலுவலகங்களாக அமைக்கப் பட்டவைதான் ஆலயங்கள், இந்த எட்டு அலுவலாளர்களுக்கும் பயிற்சியளிக்கும் கல்வி முறைகள்தான் கடவுட்கலைகள் (Divine Arts), பேய்க்கலைகள் (Devil Arts), ஆயகலைகள் அறுபத்துநான்கு (Fine Arts) ... முதலிய பல கலைகள்.;

இவற்றையெல்லாம் உணராத ஒரு கூட்டம்; ஆதிசங்கரர் எங்கோ ஆகாயத்திலிருந்து திடீரென்று குதித்தது போலப் பேசுகிறது. இந்தச் சங்கரரும் சரி, மற்ற ஆச்சாரியார்களும் சரி தலைகீழாக நின்று முயற்சித்தாலும் சித்தர்கள் கட்டிய 1008 சிவாலயங்கள், 243 சத்தி பீடங்கள், 108 திருப்பதிகள் தவிர ஓர் ஆலயத்தையோ, ஒரு பீடத்தையோ, ஒரு திருப்பதியையோ புதிதாக உண்டாக்கிட முடியாது, முடியவில்லை. இது அவர்களின் வாழ்க்கை வரலாறு வழங்கும் பேருண்மை, எல்லா நாயன்மார்களையும், ஆழ்வார்களையும் போலத்தான் இந்த ஆச்சாரியார்களும் சித்தர்கள் படைத்த ஆலயங்களிலும், கோயில்களிலும், பீடங்களிலும், திருப்பதிகளிலும் மனமுருகி நின்று அழுது புலம்பி வேண்டியும், உடல் நோகத் தொண்டுகள் புரிந்தும், மெய்மறக்கப் பத்திப் பாடல்களைப் பாடியும், கடுந்தவம் புரிந்துமே அருள்பெற்றிட்டனர். இன்னும் சொல்லப் போனால், சித்தர்கள் இட்ட அருட்பிச்சையைப் பெற்றவர்கள்தான் இந்த ஆச்சாரியார்கள். அப்படியிருக்க இவர்களின் பெயரால் வயிறு பிழைக்கும் சிறு கூட்டம், மேலே ஏறிச் செல்ல உதவிய ஏணியை எட்டி உதைக்கவும், ஆற்றைக் கடக்க உதவிய தோணியை வெட்டி ஆற்றில் விடவும் முயற்சிக்கிறது. இதை எப்படித் திருத்துவது?

இந்த ஆச்சாரியார்களின் பெயரைச் சொல்லி அருளாளர்களின் குலத்தைக் கெடுக்கும் கோடாரிக் காம்புகளாக உள்ள சிறு கூட்டத்தின் குறுகிய மனமும், கோணல் புத்தியும்தான் உலகெலாம் ஒரு குடைக்கீழ் ஆளவேண்டிய சித்தர்நெறி(தமிழர்) இருக்குமிடம் தெரியாது உருக்குலைந்திட நேரிட்டது. அதனால்தான், பிறநாட்டுப் புறச் சமயங்கள் இத் திருநாட்டில் புக நேரிட்டன.

முன்பு வேதத்தின் பெயரால் இக்கூட்டம் வெறியாட்டம் ஆடியதால்தான்; இத் திருநாட்டிலேயே புத்தம், சமணம் போன்ற மதங்கள் தோன்ற நேரிட்டன. அம்மதங்களால்

வேதவெறியர்கள் கொட்டமும், வடமொழிப் பயித்தியமும் அடங்கிற்று. அதே வேதநெறியும், வடமொழிப் பயித்தியமும் இந்த ஆச்சாரியர்களால் மீண்டும் தலைவிரித்தாடிய போது, முன்புபோல் புத்தம், சமணம் போன்ற உள்நாட்டு மதங்கள் தோன்றாமல்; வெளிநாட்டிலிருந்து கிறித்தவம், முகம்மதியம் முதலிய மதங்கள் இத் திருநாட்டுக்குள் புகுந்தன. இப்படிப் புகுந்த வெளிநாட்டு மதங்களால்தான் வேதநெறியும், வடமொழிப் பயித்தியமும் தீர்ந்திட்டன. இப்பேருண்மைகளை இனியாவது இத்திருநாட்டினர் உணர்ந்தால்தான் நல்லது. இல்லாவிட்டால், மீண்டும் மதச்சரிவும், சீர்குலைவும், சீரழிவும், சமுதாயச் சீர்கேடும், குறைவும், வீழ்ச்சியும், தாழ்ச்சியுமே பெருகிடும்.

நண்பா! எம் காலத்து இத்திருநாட்டுச் சமயத் துறையில் எக்காரணத்தை முன்னிட்டும் போட்டியோ, பொறாமையோ, குறுகிய நோக்கோ, வெறிநிறைந்த போக்கோ! வெறுப்புணர்ச்சியோ, மறுப்புச் சிந்தனையோ! பகை எண்ணமோ தலைதூக்கிடக் கூடாது என்ற உயரிய உட்கிடக்கையுடன்தான் செயல்பட்டாக வேண்டுமென்று எம்மை வழி நடத்துபவர்களும் ஆணையிட்டுள்ளனர். எமது விருப்பமும் அதுவே. ஏனெனில், உள்நாட்டுச் சமயப் பூசல்களும், போராட்டங்களும், சண்டை சச்சரவுகளும், கலகங்களும், குழப்பங்களும், மாற்றுச் சமயங்கள் உட்புகுந்திடவும், நாத்திகவாதம் தழைத்தோங்கவும் இடமளித்திடும். இருப்பினும், இன்றைக்கு இத்திருநாட்டில் நாளிதழ், வார இதழ், திங்களிதழ் ... முதலியவற்றைக் கையில் வைத்திருக்கும் ஒரு கூட்டம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்த குறுகிய புத்தியும், கோணல் மனமும், இனவெறியுணர்வும் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இத்திருநாட்டில் எண்ணற்ற சித்தர்களும், நாயன்மார்களும், ஆழ்வார்களும், இருடிகளும், பத்தர்களும், புத்தர்களும், போத்தர்களும், முத்தர்களும், சீவன்முத்தியார்களும், சித்தியார்களும் ... தோன்றி அருள்மழை பொழிந்து தெய்வீகப் பயிர் வளர்த்து வரும் வரலாற்றை அடியோடு மறந்தும், மறுத்தும், வெறுத்தும், மாற்றியும், தூற்றியும், குறைத்தும், மறைத்தும் செயல்பட்டு வருவதைக் கண்டும் எம்மால் அவர்களைக் கண்டிக்காமல் இருக்க முடியவில்லை. இதை யாரும் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது என்ற கவலை எம்மைப் பெரிதும் வாட்டுகிறது.

*“தெய்வங்கள் மனிதர்களாய் நடமாடி இதிகாசப் புராணங்கள் படைத்த திருநாடல்லவா இது? மகான்கள் நடமாடும் தெய்வங்களாக நன்னெறி வளர்த்து நற்பணியாற்றிய பொன்நாடு அல்லவா இது? பாரதக் கலாசாரமும், வேத தர்மமும், இந்து சமயமும், தெய்வ வழிபாடும்; பத்தி நெறியும் என்றென்றும் தழைத்தோங்கும் பொருட்டுத் திருவவதாரம் செய்த ஸ்ரீஆதிசங்கரரும், ஸ்ரீராமானுஜரும், ஸ்ரீமத்வரும் ஆன்மீகக் கலங்கரை விளக்கங்களாக அருட்சுடர் பரப்பிய புண்ணிய பூமியல்லவா இது?”*

***ஆனந்த விகடன் 13.1.1974 பக்கம் 109***
***பொங்கல் சிறப்பிதழ்***
***கட்டுரை “புனிதப் பயணம்” ஸ்ரீபாத தீர்த்தம்***
***(சாலிக்கிராமம்)***
***by பரணீதரன்.***

நண்பா! கி.பி 8ஆம் நூற்றாண்டுக்கு முன்னர், ஆதிசங்கரர் தோன்றும் முன் இத்திருநாட்டைச் சமண சமயத்தவரிடமிருந்தும், புத்த சமயத்தவரிடமிருந்தும், போராடிக் காப்பாற்றிய சித்தர்கள், சித்தியார்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள் ... முதலிய எண்ணற்ற அருளாளர்கள் இருந்தும் அவர்களை யெல்லாம் மறந்து, மறுத்து, வெறுத்து, மறைத்து, குறைத்து மூன்று ஆச்சாரியார்களை மட்டும் இத்திருநாட்டுச் சமயக் கலங்கரை விளக்கங்கள் என்று குறிப்பிடும் இதுபோன்ற எண்ணற்ற வெறிச் செயல்களை, குறுகிய புத்திகளை, கோணல் மனங்களைக் காணும்போது எம்மால் எப்படிக் கண்டிக்காமல் இருக்க முடியும்?

இந்த மூன்று ஆச்சாரியார்களும் சித்தர்கள் நிறுவிய ஆலயங்களிலும், கோயில்களிலும், பீடங்களிலும், திருப்பதிகளிலும், இன்னும் பிற தெய்வீக நிலையங்களிலும் உக்கி போட்டு, கன்னத்தில் போட்டு, கீழே விழுந்து கும்பிட்டு, அழுது புலம்பி, கெஞ்சிக் கூத்தாடிப் பிச்சையாக அருளைப் பெற்றுச் செயல்பட்டவர்களே தவிர;

இத்திருநாட்டு அருளாளர்களின் பரம்பரையிலே பிறந்தோ; அல்லது அரிய பெரிய தவங்களைச் செய்தோ அருள் மழையாக மாறியவர்கள் அல்ல. அப்படியிருந்தும், இவர்கள் இத்திருநாட்டின் அருள் மழைகளையெல்லாம் மிஞ்சியவர்களாக விளம்பரம் செய்யப்படுகிறார்கள். இதனைத் தடுத்து நிறுத்தாவிட்டால் பெருங்கேடுகள் விளைந்திடும்.

குறிப்பாகச் சித்தர்நெறியால் பிறந்த இத்திருநாட்டுச் சமயம் குருடர்கள் இருட்டறையில் தொட்டு விளையாடிய நிகழ்ச்சியாக அமைந்திடும். வேதங்களும், ஆரிய நெறிகளும், மனிதக் கருவில் பிறப்பதற்குப் பல நூறுயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலகம்வாழ் மனித இனத்தை உய்விக்கச் சித்தர்களால் உருவாக்கப்பட்ட மாபெரும் சமயமே சித்தர்நெறி. அச் சித்தர்நெறியின் செயல்திட்டங்களே கோயில்கள், ஆலயங்கள், பீடங்கள், திருப்பதிகள், கடவுட்கலைகள், பேய்க்கலைகள், சிறுதெய்வக் கலைகள், பூசைமுறைகள், ... முதலிய இன்னேரன்ன எண்ணற்ற வடிவங்களைப் பெற்றிட்டன. இவற்றை உலகுக்கு உணர்த்தும் பணி; ஆரியக் கூட்டத்தின் வெறியுணர்வால், குறைமதியால், கோணல் மனத்தால், இருட்டடிப்புச் செயலால், ஈனமிகு சூழ்ச்சியால் தடைப்பட்டது. அதனால்தான், இத்திருநாட்டில் எண்ணற்ற தெய்வீக நிலையங்கள் இயற்கையாகவே இருந்தும்கூட மாற்றுச் சமயங்கள் உட்புகுந்து அழிவுகளையும், இழப்புகளையும், இழிவுகளையும் உண்டாக்க நேரிட்டது. எனவே, உலகமே தன் பின்னால் கைகட்டிக் கொண்டு வரக்கூடிய அரும்பெரும் சிறப்புக்களைப் பெற்றிட்ட இத்திருநாடு; இன்றைக்கு யார் யார் பின்னாலோ வெல்லாம் கைகட்டிக் கொண்டு வாய்புதைத்துப் பின் செல்கின்றது. இந்த அவலநிலை, கேவலநிலை, இழிநிலை, அழிநிலை எம் காலத்து முழுமையாகத் தடுக்கப்பட்டாக வேண்டும். இல்லாவிட்டால், இனி வருவோர் நம்மைப் பழி கூறிட நேரிடும். இதனை உணர்ந்து எம் காலத்து நம்மவர் அனைவரும் இன உணர்வோடும், மொழிப் பற்றோடும், தாய்நாட்டுப் பிடிப்போடும் செயல்பட்டிடல் வேண்டும். இம்மாபெரும் பணி என்னால் முடிக்கப்படுமா? என்ற ஐயம் எனக்குள் அடிக்கடி எழுந்த போதும்; ஆயிரத்தெட்டு அண்டங்களையும், இயக்கும் எம் முன்னோர்களின் பேரருட் திறத்தின் முன்னால், இப்பணி எருக்கம்பஞ்சு காற்றில் மிதந்து செல்வது போல் நிறைவேறிடும் என்பதறிந்து அமைதி பெறுகின்றேன்.

நண்பா! எம் முன்னோர்கள் எல்லோருக்கும் சொல்லக் கூடாதவை என்றுதான் சித்தர் நெறியை ஓரளவு ஏட்டிலும் பெருமளவு செவிவழிச் செய்தியிலும் விட்டுச் சென்றார்களே தவிர; யாருக்குமே சொல்லக் கூடாது என்று கட்டளையிட்டுச் சித்தர்நெறியை வெளிப்படுத்தவில்லை. அதாவது, வாழை பயிரிடுவதற்கு, தென்னை பயிரிடுவதற்கு, மா பலா பயிரிடுவதற்கு, தேக்கு பயிரிடுவதற்கு, மூங்கில் பயிரிடுவதற்கு, கம்பு சோளம் பயிரிடுவதற்கு, நிலக்கடலை பயிரிடுவதற்கு ... என்றிப்படி ஒவ்வொன்று பயிரிடுவதற்கும் தனித்தனித் தரமுடைய நிலங்கள் (மண்தன்மை, வளம், நீர்ச் செழிப்பு) தேர்ந்தெடுக்கப் படுவது போல்; மனிதர்களில் யார்யாரிடத்தில் எந்தெந்த அருட்பயிரை விளைவிக்கலாம் என்று ஆராய்ந்தறிந்து தேர்ந்தெடுத்தே செயல்பட வேண்டும். அதற்காகத்தான் சித்தர் நெறியின் உயிர்நாடியான 'மனையியல்' 'மனையடி சாத்திரம்' 'உறுப்பியல்' (சாமுந்திரிகாலட்சணம்), 'கைரேகை', 'பிறப்பியல்' (சாதகம்), 'குறியியல்'. 'விரிச்சியியல்'; 'சர இயல்'; 'ஏடுஇயல்', 'உடுக்கையியல்', 'புள் இயல்', 'மந்திற இயல்'; 'மந்தர இயல்'; 'மாந்தர இயல்', 'மாந்தரீக இயல்', 'தந்தர இயல்', 'தாந்தர இயல்'; தாந்திரீக இயல்; 'தவ இயல்'; 'வேள்வி இயல்'; 'சித்த இயல்'; 'சிறுதெய்வ இயல்'; 'பேய் இயல்'; 'கடவுள் இயல்'; 'மண்ணியல்'; 'உலோக இயல்'; 'தாவர இயல்'; 'விலங்கியல்'; 'விண்ணியல்'; ... முதலிய எண்ணற்ற இயல்களைத் தெளிவாக ஏட்டில் எழுதியும்; செவிவழியாகக் கூறியும், சமய நம்பிக்கைகளாகவும் (beliefs & faiths),, பழக்க வழக்கங்களாகவும் (customs and manners) ,,. திருவிழாக்களாகவும் (Festivals) .,, பூசைமுறைகளாகவும் (rituals & pujas), செயல்வடிவில் நிலைநாட்டியும் சென்றிட்டனர் சித்தர்கள். இவற்றை நன்கு முயன்று அறிந்து புரிந்து உணர்ந்து தெளிந்து செயல்படுவோர் நாளடைவில் குறைந்திட்ட காரணத்தாலும்;

ஆரியத்தின் திறமையான வஞ்சகச் சூழ்ச்சிகளாலும் சித்தர்நெறி கொலுப் பொம்மைகளாக ஏட்டுச் சுரைக்காய்களாக, பள்ளிக் கணக்குகளாக நடைமுறைக்குப் பயன்படாதவைகளாகப் போய்விட்டன. இனியும், இதே நிலை நீடித்தால், ஆரியம் எனும் மூட்டைப் பூச்சியை ஒழிக்கச் சித்தர் நெறியென்னும் வீட்டையே தீ வைத்துக் கொளுத்த முற்பட்டிடுவார்கள் நமது பகுத்தறிவு வாதிகள்.

இவற்றை உணர்ந்துதான் ஆரிய மாயைகளைத் தெளிவாக விளக்கியுரைத்திட வேண்டிய மாபெரும் பணியினை யாம் மேற்கொள்ள நேரிட்டுள்ளது. இதனை இத்திரு நாட்டினர் தெளிவாக உணர்ந்தால்தான் எம் பணிக்குத் தேவையான துணையனைத்தும் கிடைக்கும். எனவேதான் உம் போன்று, ஆயிரமாயிரம் சித்தரடியார்கள், சித்தரடியான்கள் உருவாக்கப்பட்டு விட்ட பிறகும் கூட; யாம், இன்றும் போதுமான அளவு துணைவலிமை பெறவில்லை என்று எண்ணி வெளிப்படையாகச் செயல்படாது, அமைதியான முறையில் உள்ளிருந்தே செயல்பட்டு வருகின்றோம். யாம், இன்னும் எவ்வளவு காலம் இப்படி இலைமறை காயாக, ஆழ்கடல் முத்தாக, மலைமுகட்டுச் சந்தன மரமாக, இருட்குகைச் சிங்கமாக இருப்பது என்பது தெரியவில்லை. “எல்லாம் இறைவன் செயல்” என நினைந்தே யாம் அமைதியாகச் செயல்பட்டு வருகின்றோம்.

நண்பா! இத்திரு நாட்டின் ஒவ்வொரு துளிநீரும் அருளில் ஊற்றெடுத்தது; ஒவ்வொரு பிடி மண்ணும் அருள் விளைவிப்பது; ஒவ்வொரு கல்லும் தெய்வீக வரலாறு பெற்றது; இங்கு தவழும் காற்று பிறப்பிறப்பில்லாப் பெருவாழ்வுக்குரிய தன்மை பெற்றது; இங்கு முளைக்கும் ஒவ்வொரு இலையும் காயகல்ப ஆற்றலுடையது ... என்பதனை உலகம் உணரக் கூடிய காலமே உண்மையான மனிதத் தன்மை மலரும் காலம்.

நண்பா! **உலகில் தோன்றிய ‘அருளாளர்கள்’;** ‘அவதாரங்கள்’; ‘தேவதூதர்கள்’; ‘தேவகுமாரர்கள்’; ‘தெய்வங்கள்’; ... **எல்லாமே வாரிசற்று, தொடர்பற்றுத் தனிமரங்களாகவே இருக்கின்றனர்.** ஆனால், **இத்திரு நாட்டில் தோன்றிய ‘அருளாளர்கள்’**; ‘அவதாரங்கள்’; ‘தேவதூதர்கள்’; ‘தேவகுமாரர்கள்’ ‘தெய்வங்கள்’ **எல்லாமே வாழையடி வாழையாகத் தொடர்ந்து செழித்து வருகின்றன**. இப்படி வாழையடி வாழையாக வாழ்ந்து வரும் தெய்வீக சத்தியை, தெய்வீக நெறியை, தெய்வீக வழியை, தெய்வீகப் பண்பாட்டை தெய்வீக நம்பிக்கையை, தெய்வீக நாகரீகத்தை முதலில் நம்முடைய இனத்தவர் நன்கு அறிந்து தெரிந்து புரிந்து தெளிந்து உணர்ந்திடல் வேண்டும். அப்பொழுதுதான், நமக்குள் இருக்கும் சாதிவேறுபாடுகள், சாதிச்சண்டை சச்சரவுகள், சமுதாய ஏற்றத்தாழ்வுகள், சமுதாய மாறுபாடுகள், சமுதாயக் கூறுபாடுகள் ... முதலியவை விலகி ஒற்றுமை செழித்தோங்கி வளர்ந்திடும்.

உலகிலேயே எந்த நாட்டிலுமில்லாத அளவு பன்மடங்கு கோயில்களை (எல்லா வகையான வழிபடுமிடங்கள்) உடைய ஒரே ஒரு நாடு இத் திருநாடுதான். இங்கு இல்லாத தெய்வீக நிலைகளே இல்லை. என்னென்ன வகையான தோற்றங்கள், வடிவங்கள், இடங்கள், பீடங்கள், கோயில்கள், ஆலயங்கள், தெய்வீக நிலைகள், அருள்மிகு நீர்நிலைகள், பேரருட்திறம் நிறைந்த அருளாளர்கள், புனிதவரலாறுகள் .... என்று வகைப்படுத்தி எண்ணிப் பார்க்கும் பொழுதுதான் நாம் எத்தனை யெத்தனை பிறவிகளிலோ வெல்லாம் செய்த புண்ணியங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்துதான் நம்மை இத்திருநாட்டில் பிறக்கச் செய்தன என்று பூரிப்போடு நினைக்கத் தோன்றும். இருப்பினும் குரங்குகைப் பூமாலை போல் நமது பெருமைமிகு அருட் செல்வங்கள் அனைத்தும் குறுகிய நோக்கமும், வெறிமனமும், குள்ளநரிச் சிந்தையும் படைத்த கூட்டத்தால் சின்னாபின்னமாகச் சிதைத்தழிக்கப்பட்டு விட்டன. இச்சீரழிவு நிலையில்தான் நாம் நமது அருட்செல்வங்களைக் காக்கப் புறப்பட்டிருக்கிறோம்.

அன்பார்ந்த நண்பா! நமது நாட்டில் மதத்துறையில் ஏற்பட்டிட்ட மோசடிகள், கலப்புகள், ஏமாற்றங்கள், அழிவுகள், திருடுகள் ... முதலியனவற்றை முறைப்படுத்தி ஆராய்ந்து அறிந்தால்தான், தமிழரின் உண்மையான ‘மதம்’ என்ன? என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். பல இனத்தவர் தமிழகத்தில்

குடியேறி வாழ்வு பெற்ற போது; தங்களின் நிலேயான வாழ்வுக்குத் தமிழரின் மதத்திலேயே வழித்துறைகள், வாய்ப்பு வசதிகளேச் செய்திடலே சிறந்தது என்று துணிந்து பல புதிய கதைகளேயும், கற்பனேகளேயும், கருத்துகளேயும், நம்பிக்கைகளேயும், பழக்கவழக்கங்களேயும், வழிபாட்டு முறைகளேயும், வேற்று மொழிச் செல்வாக்கினேயும் ***(தமிழ்நாட்டில் உள்ள தமிழரின் கோவில்களில் உள்ள தமிழ்க் கடவுள்களுக்கு வடமொழியில் (Sanskrit) மந்திரம் சொல்லிப் பூசை செய்யும் பழக்கம் எப்படித் தோன்றியது? எப்பொழுது தோன்றியது? எவரால் தோற்றுவிக்கப்பட்டது? இதற்கு மறுப்புகளும், எதிர்ப்புக்களும் எழாமலா இருந்தன? அப்படி எழுந்தவைகளே எவ்வாறு சமாளித்து வென்று நின்றனர்? என்பன மிகப்பெரிய புரியாத புதிர்களாக இருந்து என்னேயும், என் தந்தையையும், எம் போன்ற ஆய்வாளர்களேயும் கதி கலங்கச் செய்து விட்டன, ஒருவாறு யாம், இப் புரியாத புதிர்களே விடுவித்துள்ளோம். உரிய வாய்ப்புழி அதனே விளக்குகிறோம்.)*** காலமுறைப்படி (chronologically) ஆராய்ந்திடல் வேண்டும். அதற்கு நாட்டிலுள்ள 1. 'இலக்கியங்கள்' (literature) 2. 'நீதி நூல்கள்' (ethics) 3. 'பத்திப்பாடல்கள்' (hymns, sacred verses) 4. கல்வெட்டுக்கள் (stone inscriptions) 5, 'செப்புப் பட்டயங்கள்' (copper plate records) 6. பிறமொழி நூல்கள் 7. பிறநாட்டுப் பயணிகள் குறித்திட்ட குறிப்புகள் 8. ஓவியங்கள் 9. சிற்பங்கள் 10. செவிவழிச் செய்திகள் 10. அச்சுக்கு வராத ஓலேச்சுவடிகள் 11. அடுத்தவர்களுக்குச் சொல்லலாகாது என்று பரம்பரையாகக் காக்கப்பட்டு வரும் மந்திரங்கள் ... முதலிய இன்னேரன்ன சான்றுகளும், ஊன்றுகளும் (proofs and evidence) முறையாக ஆராயப்படல் வேண்டும்.

இவ்வாராய்ச்சி எம்போன்ற தனிமனிதரின் ஆராய்ச்சியாக முடிவடைந்திடக் கூடாது; இது, தேர்ந்தெடுக்கப்பட்ட அறிஞர் பெருமக்களால் அமைந்த குழுவால், குறைந்தது இந்தியத் துணேக்கண்டமும், இலங்கையும், சுற்றுப்புறத் தீவுகளும் முழுக்கச் சுற்றிப் பார்த்துத் தேவையான சான்றுகளேத் திரட்டி ஆராயப்பட வேண்டிய ஒன்ருகும்.

... ... ... ...

அன்பு நண்பா! என்றைக்கு என்னுடைய ஆராய்ச்சி வெறி தணிந்து, என் வாழ்வு நெறிப்படுமோ! என்றைக்கு நான் எல்லோரையும் போல்; அமைதியும் இன்பமும் நிறைந்த வாழ்வு வாழப் போகிறேனே! என்றைக்கு என் நெஞ்சில் குமுறி வெடித்துக் கொண்டிருக்கும் எரிமலேகள் அடங்கப் போகின்றனவோ? என்றைக்கு என் சிந்தைக்கடலில் வீசும் கடும்புயலும் கொந்தளிப்பும் அலேகளும் ஓயப் போகின்றனவோ? என்றைக்கு என் உறங்காத விழிகள் உறங்கப் போகின்றனவோ? என்றைக்கு நிறைவெய்தாத என் உணர்வுகள் நிறைவு பெறப் போகின்றனவோ? என்றைக்கு ஓய்வு பெருத என் உடல் ஓய்வு பெறப் போகிறதோ? ... தெரியவில்லே. ... ... ...

நண்பா! நான், பச்சிளம் பாலகனுய் இருக்கும் பொழுதே; என் தந்தை, எனக்கு உலக வரலாறுகளேயும், தமிழினச் சாதனேகளேயும், தமிழர்க்குற்றுள்ள இழிநிலேகளேயும், இனி ஆற்ற வேண்டிய பணிகளேயும் சொல்லிச் சொல்லி என்னே ஒரு முழுமையான ஆராய்ச்சி வெறி கொண்டவனுகவே ஆக்கிவிட்டார். எப்படி, சர்க்கசு (circus) விளேயாட்டுக்களில் கத்தி எறிகிறவன், கண்ணேக் கட்டிக் கொண்டாலும், இயந்திரம் போல் குறி தவருமல் கத்தி எறிகின்ருனே! அது போல், நான் என் நினேவுகளேயும், முயற்சிகளேயும் **'தமிழர் எழுச்சியையும், விழிச்சியையும்'** அடிப்படையாகக் கொண்டே செயல் படுத்துகின்றேன். இது எதில் போய் முடியுமோ? தெரியவில்லே.

அன்பு நண்பா! உலகியலோடு நன்கு தொடர்பு கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் என் தந்தை பெருமுயற்சிகள் செய்து என்னேப் பல்கலேக் கழகப் பட்டங்கள் பெறுமளவு படிக்கச் செய்தார். ஆனுல், கல்விச் சாலேகளில் ''சாதிவெறியும்', 'மதவெறியும்', 'இனவெறியும்', 'பணவெறியும்', 'சிபாரிசு வெறியும்', 'கையூட்டு வெறியும்'... மிக மிக நிறைந்து எண்ணற்ற ஊழல்களே உண்டாக்கியுள்ளன. அதனுல், கல்விச்சாலேப் பட்டங்களுக்காக

ஏங்காமலும் மயங்காமலும் செயல்பட்டால்தான் நம்மால் ஏதாவது சில நன்மைகளைச் செய்யமுடியும் என்ற உண்மையைப் புரிந்து செயல்படுகின்றேன்..

… … …

இன்றைக்குச் சமுதாயத்திலும், சமயத்திலும், அரசியலிலும் முறையான கல்வியும், கல்லூரிப் பட்டங்களும் இல்லாதவர்களே சிறந்து தலைமை தாங்கிச் செயல்படுவது ஒன்றே போதும் என் கருத்தில் உண்மையும் திண்மையும் உண்டு என்பதை விளக்கிட. நமது பாடத்திட்டங்களும் இளைஞர்களைக் கோழைகளாக, அடிமைகளாக, தன்னலமிக்கவர்களாக, பொதுநோக்கோ, அறிவோ அற்றவர்களாக, இயக்குவார் இயக்க இயங்கும் இயந்திரங்களாக மாற்றி வருகின்றனவே தவிரப் புதுமையும், புரட்சியும் மிக்க சிந்தனை-யாளர்களாகவோ, விஞ்ஞானிகளாகவோ, அறிஞர்களாகவோ. மெய்ஞ்ஞானிகளாகவோ மாற்றவில்லை.

அன்பு நண்பா! என் வாழ்நாள் எப்பொழுது எந்த நிலையை எய்தும் என்பதனை எண்ணிக் கூடப் பார்க்க முடியாதவனாக நான் வாழ்வதால்தான், அவ்வப்பொழுது, என் கருத்துக்களையும், உணர்வுகளையும், ஆய்வு முறைகளையும், ஆய்ந்தெடுத்த முடிவுகளையும் அஞ்சல்களாகப் பலருக்கும் எழுதி வருகின்றேன். இந்த அஞ்சல்கள்தான் ‘ஆய்வுக்காக’ ‘அன்னைத் தமிழுக்காக’ ‘தாய்த் தமிழினத்துக்காக’ ‘தமிழ்த் திருநாட்டுக்காக’ … வாழ்ந்திட்ட ஒரு வெறிபிடித்த ஆராய்ச்சியாளனை ஓரளவாவது நம் மக்களும் உலகமும் அறிந்திட முடியும்.

> அருளாளர்க்கிடையிலோ அல்லது பத்தர்களுக்-கிடையிலோ, வழிபாட்டு நிலையத்தின் பெயராலோ, வழிகாட்டும் குருமார்களின் பெயராலோ, ஏற்றுவாழும் மதத்தின் பெயராலோ போட்டி பொறாமைகளோ, வேற்றுமை உணர்வுகளோ வளரவே கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது! அதாவது, அனைத்து மதங்களும், அருளாளர்களும், வழிபாட்டு நிலையங்களும் அருட்சத்தியால் அகஇருள்களையும், புறஇருள்களையும், நோய் நிலைகளையும், பேய்நிலைகளையும், தேய்நிலைகளையும் அகற்றிடும் அருட்பணி விரிவாக்கத் திட்டம்தான் அனாதிகாலத்திலேயே சித்தர்நெறி என்கின்ற இந்துமதமாகப் பிறப்பெடுத்தது.

அன்பு நண்ப! உலக அரசியல் வரலாற்றை எடுத்தியம்ப வேண்டுமானாலும் சரி; உலகச் சமுதாய வரலாற்றை எடுத்தியம்ப வேண்டுமானாலும் சரி; மனித இனத்தின் அறிவியல் வரலாறு, கலையியல் வரலாறு … முதலியவைகளை எடுத்தியம்ப வேண்டுமானாலும் சரி ‘மதம்’ (சமயம் Religion)தான் தேவையான ஊன்றுகளையும் சான்றுகளையும் (Proofs and evidences) தருகின்றது. அதாவது, மதம்தான், உலகியல் நிகழ்ச்சிகளிலும் கருத்துகளிலும் சிறந்தனவற்றைப் போற்றிப் பேணிப் பாதுகாத்து வருகின்றது என்பதாகும்.

நண்ப! ‘மதம்’ என்ற சொல்லே, இன்றைய பகுத்தறிவு வாதிகளால் ‘கசப்பான ஒன்றாக’, ‘பயனற்ற ஒன்றாக’ ஆக்கப்பட்டு வந்துள்ளது. ஆனால், ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால், மனிதனின் கதையை ஓரளவாவது காலவரன் முறையில் (chronology) கணக்கிட முடிகிறது என்றால்; மதம் காத்துத் தந்துள்ள கருத்துக்களும், செய்திகளும்; நிகழ்ச்சிகளும், பழக்கவழக்கங்களுமே யாகும். இதனை உணராதவர்களும் உணரும் பொற்-காலம்தான் மனித வரலாறு முழுமை பெறும் நற்காலம்.

உலக வரலாற்றை ஒழுங்குபடுத்த மதவாதியான ஏசுகிறிஸ்துவின் தோற்றம்தான் பயன்பட்டுள்ளது. “கிறிஸ்த்துவுக்கு முன் (B.C - Before Christ) கி.மு என்றும்; “கிறிஸ்த்துவுக்குப் பின் (After the Death of Christ - A.D)” என்றும் உலக வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு ஓர் எல்லை கிடைத்திருக்கிறது. இதேமுறை இந்தியத் துணைக் கண்டத்தில் ‘புத்தருக்கு முன்’, ‘புத்தருக்குப் பின்’, ‘மகாவீரருக்கு முன்’, ‘மகாவீரருக்குப் பின்’, என்று தோற்றுவிக்கப்பட்டும் வெற்றி பெறவில்லை. தென்னிந்தியாவில், தமிழர்களால் ‘முதல் ஊழிக்கு முன்’ (கடல் கோள்…) ‘முதல் ஊழிக்குப் பின்’, ‘இரண்டாம் ஊழிக்குப் பின்’, மூன்றாம் ஊழிக்குப் பின்’ என்று மூன்று பெரிய உலக அழிவு நிகழ்ச்சிகள் கால வரன்முறைக் கணக்கீட்டுக்கு எல்லைகளாக அமைகின்றன. தென்னிந்திய நிலவியலில் ஏதோ ஒரு பெரிய இயற்கை மாற்றத்தால் ‘காவிரியாறு’ (Cauveri River)

தோன்றியிருக்கின்றது. இதைத் தமிழர்கள் சமய வரலாற்றில் (Religious History) குறிப்பிட்ட ஆலயம் குறிப்பிட்ட 'சித்தர்கள்' அருளாளர்கள் (mystics & divinetors) தோன்றிய காலத்தைக் 'காவிரிக்கு முன்', 'காவிரிக்குப் பின்' என்று காலவரன்முறை எல்லையொன்றைக் கையாளுகின்றார்கள். அடுத்துத் தென்னாடு முழுதும் 'திருக்குறள்' (Thirukkural) என்ற பேரிலக்கியம் எழுதப்பட்ட காலத்தை முதலாகக் கொண்டு திருவள்ளுவர் ஆண்டு (Thiruvalluvar Era) கணக்கீடு முறை வழக்கில் கையாளப்பட்டு வருகிறது. இதனை,

> **"வகை கெட்டு பகை கொண்டு வாகை சிதைத்தார் சிகையிலார் முகை விரிந்து வகைமிகு நாற்றம் வண்டமிழோடு இறை புகழை திசைகொள வையகம் பொய் மெய்யாகி புறம் அகமாகி தோகைமயில் விரித்தாடத் தொல்புகழ் வள்ளுவன் வாயுரை போகர் மூவாயிரம் மூவர் மூவாயிரம் முன் கழிந்த மூவாயிரம் புகைக் காலத்தால் வாகையும் வகையும் மாறு வடிவில் கையொளிச் செப்பேட்டில் மிகை கொளாது வடித்திட்டுச் சிகையிலார் பகை யொழித்துச் சிவன் புகழ் பரப்பிச் சிறுவனும் தொகையடியார் தொண்டாற்றச் சூலை நோய்ப் பெரியோருடன் ஒன்றி கூகைநிலை சித்தர் தத்துவ மாளிகை நீங்கப் பதினெட்டு நெறி திரட்டி சோகைநிலை ஆலயத்தும் கோயிலும் சொல்லா வடமொழி சொல்லிட நகையொடு நலிவும் இருளும் நாளும் பெருகிய பெருங்கேடு தொகையொடு தொல் தமிழ்த் தொகை பதினெட்டால் தொலைந்தது பாகையொடு களிறாய் மூன்று ஊழிக் காலமும் முறையாக வகைபெறு வழிப்பாதை மடமாய் கருத்து முடவர்க்குதவின".**

*(இவ்வரிகள் "சித்தர்கள் வரலாறு" என்ற தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டவை. 'திருவள்ளுவர்' கால வரன்முறைக்கு ஓர் எல்லையாக இருந்தார் என்பதை விளக்குகிறது. சிறந்த தமிழ் நூல்கள் செப்பேட்டில் எழுதப்படல் கி.பி 600 இல் இருந்ததற்குரிய சான்றும் இவ்வரிகளில் உள்ளன)*

அன்பு நண்ப! ஆண்டுகளை முறையாகக் கணக்கிடுதல் ஆரியவர் வருகைக்குப் பிறகுதான் இந்தியத் துணைக்கண்டத்தில் ஏற்கப்பட்டது என்பது போன்ற கருத்தை வலியுறுத்தும் சான்றாக "யுகம்" என்ற கணக்கீடு உள்ளது. ஆனால், "யுகம்" என்ற சொல் தமிழில் உள்ள "உகம்" என்ற சொல்லின் வடமொழித் திரிபேயாகும்.

'உகுத்தல்', 'உகுதல்' என்ற சொற்கள் 'உதிர்தல்' = 'முதிர்ந்து கீழே விழுதல்' என்ற பொருளின் அடிப்படையில் பிறந்தவை. 'கண்ணீர் உகுத்தான்', 'மரத்திலிருந்து பழங்களை உகுத்தான்' என்ற வழக்காற்றுச் சொற்றொடர்களின் ஆட்சி உள்ளன.

'உகம்' என்றால் 'முதிர்ந்தது', 'முடிந்தது', 'எல்லையேற்பட்டு விட்டது' என்று பொருள். அதாவது காலத்தால், ஒரு பொருள் அல்லது ஒரு நிகழ்ச்சி அல்லது ஒரு நாடு மறைவதை 'உகமாகி விட்டது' என்று கூறுவது மரபாகும். எனவே, 'உகம்' என்ற சொல் அழிவாலோ, காலத்தாலோ, பருவ முதிர்ச்சியாலோ முடிவடைந்த ஒன்றைக் குறிப்பதாகும் என்பது தெளிவு.

'லெமூரியாக் கண்டம்' (Lemuria) என்ற பழந்தமிழ் நாடு (குமரிக்கண்டம்) பல கடல் கோள்களால் அழிந்தது. அவற்றுள் மூன்று கடல் கோள்கள் (Inundations) தெளிவாகக் குறிக்கப்படுகின்றன. இந்த மிகப்பெரிய நிலம்தான் உலகில் முதன்முதல் பரந்த கடல் நீர்ப் பரப்பிடை தோன்றியது. அம்முதல் நிலத்தில் பிறந்தவர்தான் தமிழர். இந்தப் பரந்த முதல் நிலத்தில் பிறந்ததுதான் மனிதகுல நாகரிகங்களின் தாய் நாகரிகம். எனவே, இன்று உலகில் காணப்படும் மதங்கள் அனைத்துக்குமுரிய அடிப்படைத் தத்துவங்கள், சித்தாந்தங்கள், வேதாந்தங்கள், ஒழுகலாறுகள் ... முதலிய அனைத்தையும் ஈன்றெடுத்தவர் தமிழரே. இப் பேருண்மையைக் குறுகிய இனப் பற்றாலோ, நாட்டுப் பற்றாலோ, காழ்ப்புணர்ச்சியாலோ, போட்டி மனப்பான்மையாலோ மறுப்பவர் பலராக இன்றிருக்கலாம். ஆனால், நடுநிலையில் நின்று, உண்மையான ஆய்வு நோக்கோடு ஆராய்ச்சி செய்பவர்கள், உலகில் தோன்றிட்ட எல்லா மதங்களுக்கும் இடையே குறிப்பிட்ட சில

அடிப்படை ஒற்றுமைகள் இருப்பதையும், அந்த ஒற்றுமைகள் ஒரே இனத்தால், ஒரே நாட்டில், ஒரே காலத்தில் உண்டாக்கப் பட்டவையே இவை என்பதை மெய்ப்பிக்கின்றன.

இவ்வரிய பெரிய பேருண்மை ஐயத்துக்கு இடமின்றித் தெளிவாக எம் போன்றவரால் பலகாலம் உணரப்பட்டும்; இதனை உலக அரங்கில் எடுத்துக்கூற வாய்ப்பின்றியும்; வாய்ப்பேற்பட்ட காலத்து, உலகம் இதை ஒப்புக் கொள்ளுமா? என்று தயங்கியும், மயங்கியும் செயல்படாநிலை தொடர்ந்திட்டது. எனவே, என் காலத்தில் எப்பாடு பட்டாவது அறிவுலகின் முன் இப்பேருண்மைகள் பற்றிப் பேரன்பு கூர்ந்து சிந்தியுங்கள் என்ற வேண்டுகோளையாவது முறையாகவும் தெளிவாகவும் செய்திடல் வேண்டும் என்ற உறுதிபூண்டுள்ளேன், நான் இப்படி உறுதி பூணும்படி செய்தது கடந்த ஆயிரம் ஆண்டுகளாக (தஞ்சாவூர் பெரிய உடையார் கோயில் கட்டி முடித்த சித்தர் கருவூருருக்குப் பிறகு) எமது முன்னோர்கள் செய்து வந்த முயற்சியேயாகும்.

அன்பு நண்பா! என் தந்தை, தனது இறுதிக் காலத்தில் "நீ! எதையும் முடிந்த முடிபாகக் கூறினால்தான் உலகில் மறுப்பும் வெறுப்பும் எதிர்ப்பும் எழுந்திடும். அதனால், உனக்கு ஐயமின்றித் தெளிவாகத் தெரியக்கூடிய கருத்துக்களையும், நிகழ்ச்சிகளையும் உண்மைகளையும், கொள்கைகளையும் கூட 'அறிவுலகின் முன் இவற்றை வைக்கின்றேன். அறிவுலகம் நடுநிலையில் நின்று ஆராய்ந்து எடுக்கும் முடிவுகளை ஒப்புக் கொள்ளத் தயாராக இருக்கின்றேன். அதற்குமுன் இவை பற்றி நான் கேள்விப்பட்டவைகளை, படித்தவைகளை ஆராய்ந்து அறிந்தவைகளையும் கூறி விடுகின்றேன். இவற்றையும், துணையாகக் கொண்டு ஆய்வுகளை நிகழ்த்துங்கள்' என்று வேண்டுகோள் விடுத்திடு அப்பொழுதுதான், நீ, வெளியில் கூறிடக் கூசிடும் மிக நுண்ணிய உண்மைகள் கூட வெளிப்பட்டிடும்" ... என்பார். அதை நினைவில் கொண்டே செயல்படுகின்றேன்.

நண்பா! தமிழரின் தோற்றம், தமிழ் மொழியின் தோற்றம், தமிழர் மதத் தோற்றம், தமிழர் நாகரிகத் தோற்றம், தமிழர் பண்பாட்டுத் தோற்றம், தமிழர் அரசியல் சமுதாய வரலாற்றுத் தோற்றம், தமிழர் வாழ்ந்த நாடு ... முதலியவை பற்றிய உண்மைகள் காலமுறைப்படி (chronology) ஆராய்ந்தறிந்து ஒழுங்குபடுத்தப்பட்டு; அதனை அடிப்படையாகக் கொண்டு உலக வரலாறு எழுதப்படும் பொன்னுள்தான் மனிதகுல உயர்வுக்கும்; ஒற்றுமைக்கும்; அமைதிக்கும் வழிகாணும் நன்னாள். மனிதர்கள், வண்ணத்தால், வடிவத்தால், மொழியால் ... பல இனப் பிரிவுகளாகத் தோன்றிய போதிலும்; அங்கங்களால், அடிப்படையான வேட்கை உணர்வுகளால் ஒரே இனத்தவராகத்தான் இருக்கிறார்கள். இதனை, வாழ்வியலில் உணர்ந்து செயல்படும்படி செய்வதற்கு மனித இனத்தின் ஆரம்பமும், வளர்ச்சியும் முறையாக விளக்கப்படலே சிறந்த வழியாகும்.

இவற்றை யெல்லாம் நினைவில் கொண்டுதான், கடந்த பல தலைமுறைகளாக என் முன்னோர்கள் முயன்ற முயற்சிகளின் முழுமையைச் செயலாக்கிடுதல் மிகமிக இன்றியமையாத கடமையென்று உணர்ந்து என்னை முழு விருப்போடு என் தந்தையின் கட்டளைகளை நிறைவேற்றுவதில் ஈடுபடுத்திக் கொண்டுள்ளேன்.

நண்பா! உனக்கும், உன்னைப் போன்ற நமது எண்ணற்ற நண்பர்களுக்கும் நான் எனது ஒவ்வொரு நொடி வாழ்வையும் ஆய்வுக்காகவே செலவிட்டு வருகின்றேன் என்பதை நன்கறிவீர்கள் என்பதால்; என்னுடைய கருத்துக்கள் முறையான, நெடிய ஆய்வுக்குப் பிறகே வெளியிடப் படுபவை என்ற கருத்தை உலகுக்கு விளக்கிடும் சான்று(கரி)களாக நீங்களனைவரும் செயல்படல் வேண்டும். அத்துடன் நான், தமிழனாய்ப் பிறந்து விட்டதால்; தமிழர்களைப் பற்றி மிகமிக உயர்வாகக் கூறிடல் வேண்டுமென்ற விருப்புடன் செயல்படுவதாகவும் யாரும் கருதிடலாகாது. மதத்துறையில், தமிழர்கள் எவ்வளவோ அரிய பெரிய நுண்ணிய இயற்கை யுண்மைகளைக் கண்டுபிடித்தே எல்லாத் தத்துவக் கருத்துக்களையும், பழக்கவழக்கங்களையும், பிற ஒழுகலாறுகளையும் அமைத்தார்கள். ஆனால், திறமைமிக்க திருடர்கள் அவற்றின் வடிவங்களைச் சிதைத்தும், வண்ணங்களை

மாற்றியும் தங்களுடையதாக ஆக்கிக் கொண்டு விட்டார்கள். அவர்கள், நேர்மையான முறையில், தமிழர் மதத்தில், சேர்ந்திருக்கலாம்; ஆனால், ஏனோ, அப்பெருந்தன்மை இல்லாமல் மாற்றான் மகவைத் திருடித் தன் மகவு என்று சொல்லி உரிமை பாராட்டிப் பெருமை பேசி வளர்த்தனர். காலம் சென்றது. திருடி வளர்த்த மகவு வளர்த்தவர்களைப் போலில்லாமல்; தன்னுடைய சொந்தப் பெற்றோர்களையும் அவர்தம் முன்னோர்களையும் போலவே வளர்ந்திட்டது. அதனால், மகவைத் திருடி வளர்த்தவர்கள் பாடு மிகவும் திண்டாட்டமாகி விட்டது. அவர்களால், தங்களுடைய மகன் சொந்த மகனல்ல, வளர்ப்பு மகனே என்று கூறவும் முடியவில்லை; அதே நேரத்து வளர்ப்பு மகனின் சொற்களையும் செயல்களையும் தங்களுடைய பாரம்பரியத்துக்கு உரியதுதான் என்று ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை.

அன்பு நண்பா! இத்திரு நாட்டிற்கு வந்த ஆரியர்கள்; இத்தெய்வ நாட்டில் ஏற்கனவே இருந்த தத்துவங்களையும், வேதாந்தங்களையும், சித்தாந்தங்களையும், நம்பிக்கைகளையும், கொள்கைகளையும், கோயில்களையும், ஆலயங்களையும், கடவுட்கலைகளையும் (Divine Arts), தெய்வீகக் கலைகளையும் (Mystical Arts) தங்களுடைய மொழிச் சொற்களால் புதியபுதிய வடிவப்படுத்தித் தங்களுக்கு உரியவைகளாக ஆக்கிக் கொண்டார்கள், ஆனால், மேற்குறித்த அனைத்தையும் ஈன்றெடுத்த "சித்தர்கள்" (SIDDHARS) இல்லற வாழ்வின் மூலம் தங்களின் படைப்புகள் (Creations) அனைத்துக்குமுரிய உயிர்நாடியான அடிப்படை உண்மைகளைப் பரம்பரைக் குடும்ப இரகசியங்களாகக் (Family Secrets) காப்பாற்றி வருகின்றார்கள் என்ற பேருண்மை இந்த ஆரியர்களுக்குத் தெரியாமல் போயிற்று. அத்துடன், அவர்கள், சொந்தம் பாராட்டியனவற்றைக் காலப்போக்கில் அவர்களால் முழுக்கத் தங்களுடையவைகளாக ஆக்கிக் கொள்ள முடியாமல் போயிற்று. அதன் விளைவுதான் 'சங்கரர்', 'இராமானுசர்', 'மாத்வர்' ஆகிய மூவரும் தோன்றி வேதத்தை அடிப்படையாகக் கொண்டு ஆரியக் கருத்துக்களைத் தனிமைப்படுத்திப் புத்துயிரளிக்க நேரிட்டது. இவற்றை, இன்னும் இன்றைய ஆரியரோ, தமிழரோ வெளிப்படையாக, முழுமையாக, உணராமல் இருக்கின்றார்கள். என் காலத்தில், உன் போன்றோர் துணையால் இவையனைத்தும் நிகழ்ந்தேறிடும் என்று நம்புகிறேன்.

நண்பா! என் சிந்தனை வேகமும், உணர்வு ஆர்வப் பெருக்கமும் என்னை அடிக்கடி கரைபுரண்டோடிடும் காவிரியாற்று வெள்ளம் அடிக்கடி கரையை உடைத்துக் கொண்டு போவது போல் கூற வந்ததையே தொடர்ந்து கூறாமல் எங்கெங்கோ செல்லச் செய்து விடுகின்றது. அன்பு நண்பா! இதற்குக் காரணம், நான் இரவு பகலென்ற வேறுபாடின்றி; ஏறத்தாழ உலகின் பெரும்பகுதியில் வெறி கொண்டு அலைந்து திரட்டிய எண்ணற்ற அரிய பெரிய உண்மைகள் அனைத்தையும் விரைவில் வெளியிட வேண்டுமென்ற பேரார்வம்தான். நண்பா! நம் தமிழ்ச் சமுதாயம், உலகம் முழுதும் பரந்து கிடக்கின்றது. ஆனால்; தமிழர் தங்களின் மொழிப் பற்று இனப்பற்று, நாட்டுப் பற்று, பண்பாட்டுப் பிடிப்பு... முதலிய அனைத்தையும் மறந்தும், துறந்தும், மறுத்தும், வெறுத்தும், பழித்தும், இழித்தும் வாழுகின்றார்கள். இந்த இழிநிலையை, அழிநிலையை உடனடியாக மாற்ற வேண்டுமென்ற வெறியால்தான்; முதலில் பிற இனத்தால், தமிழரின் பெருமைக்குரிய வாழ்வியல் கொள்கைகளை எப்படி யெப்படி யெல்லாம் திருடிக் கொண்டு; தமிழரைத் தலைகுனிந்து, அடிமைகளாக வாழும்படி செய்திட்டனர் என்ற சூழ்ச்சிமிகு வரலாற்றைத் தெளிவாகச் சொல்லிட விரும்புகின்றேன். என்னுடைய உணர்ச்சி கட்டுக்கடங்காத வெறிநிலையில் இருப்பதால்தான்; என் செயல் அழிவுகளை உண்டாக்கிடுமென்று அஞ்சி; இரவு பகலாக உன் போன்ற நண்பர்களுக்கு என் உணர்ச்சிகளைக் கொட்டிக் கொட்டி; நான் திரட்டியுள்ள பேருண்மைகளை விளக்கி விளக்கி, நான் போட்டுள்ள திட்டங்களைச் சுட்டி சுட்டி நெடிய அஞ்சல்கள் எழுதிடுகின்றேன்.

அன்பு நண்ப! 'உகம்' என்ற தமிழ்ச் சொல் 'முடிவு' என்ற பொருளைத் தரக் கூடியது. இது, சிறப்பாக உலகின் பேரழிவைக் குறிப்பதாயிற்று. உலகில், வேறு எந்த நாடும் சந்தித்திராத மிகப் பெரிய, கொடிய பேரழிவைத் தமிழ்நாடுதான்

தொடர்ந்து மூன்று முறை சந்தித்திருக்கின்றது; எண்ணற்ற அழிவுகள் நிகழ்ந்திருந்த போதிலும், நினைவில் நிலையாக நின்றிடக் கூடிய மிகப் பெரிய, கொடிய பேரழிவுகள் மூன்றே. அவை மூன்றுமே கடல் பொங்கியெழுந்ததால் நிகழ்ந்தவையே. முதல் தடவை கடல் பொங்கியெழுந்த பொழுது குமரிக்கண்டத்தின் பெரும் பகுதி அழிந்தது; அதில் தமிழ்நாட்டின் தலைநகருடன் முதல் தமிழ்ச் சங்கமிருந்ததுமான 'முதல் மதுரை மாநகர்' அழிந்தது. இரண்டாவது தடவை கடல் பொங்கியெழுந்த பொழுது; எஞ்சிய தமிழ் நாட்டின் பெரும்பகுதி அழிந்தது; அதில் எஞ்சிய தமிழ் நாட்டின் தலைநகருடன் இடைத்தமிழ் சங்கமிருந்ததுமான 'இரண்டாவது மதுரை மாநகர்' (இது 'கபாடபுரம்' என்றழைக்கப்பட்டது) அழிந்தது. மூன்ருவது தடவை கடல் பொங்கியெழுந்த பொழுது; மிஞ்சிய தமிழ்நாட்டின் பெரும் பகுதி அழிந்தது; அதில் மிஞ்சிய தமிழ்நாட்டின் தலைநகரும், மூன்ருவது 'கடைத் தமிழ்ச் சங்கமிருந்ததுமான' 'மூன்ருவது மதுரை மாநகர்' (இது உத்தர மதுரை" என்றழைக்கப்பட்டது) அழிந்தது. இப்படி முறையாக மூன்று 'முதல்', 'இடை', 'கடை' என்ற மூன்று சங்கங்கள் இருந்து அழிந்தது. இச் சங்கங்கள் இருந்தன என்பதற்குரிய சான்றுகள் தெளிவாக இருக்கின்றன.

*'தலைச் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் என மூன்று சங்கம் இரீ இயினர் பாண்டியர்;'*

... ... ...

இன்று தமிழ் வளர்க்கும் தலைநகராக உள்ள மதுரை, ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் (சிலப்பதிகாரத்துள் குறிக்கப்படுகிறவன்) காலம் வரை நாலாவது தமிழ்ச் சங்கத்தைப் பெற்றிருந்த தமிழ்நாட்டுத் தலைநகராகும். எனவே, இதுவரையிலும் தோன்றிட்ட தமிழ்ச் சங்கங்கள் நான்கு ஆகும். இத் தமிழ்ச் சங்கங்களின் துணையால்தான் ஒவ்வொரு உகத்தையும் பற்றித் தெளிவான செய்திகள் கிடைத்துள்ளன. ஏனெனில், ஒரு நாட்டின் குறிப்பிட்ட காலத்தின் உண்மையான வரலாற்றைத் தெளிவாக விளக்கக் கூடியது இலக்கியம்தான். (literature can alone picturise the true history of a nation).

இலக்கிய அடிப்படையில் நோக்கும் போது முதல் மூன்று உகங்களின் கால எல்லை (ஆண்டுகள் Number of years = period = Era) அக்கால அரசர்கள், புலவர்கள், இலக்கியங்கள், இலக்கணநூல்கள்... முதலிய இன்னேரன்ன பிற சிறப்புக்குரிய குறிப்புக்கள் விளக்கப்படுகின்றன. அதே போல், மூன்று உகங்கள் முடிந்தபின் இன்றுள்ளது நாலாவது உகம்.

இந்த நாலாவது உகத்தின் எல்லையை அறுதியிட்டுக் கணித்திட இயலாது என்பது போல்; இதன் ஆரம்பக் காலத்தையும் தெளிவாகக் கூற முடியவில்லை. இந்த நாலாவது உகத்தில் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பாண்டிய அரசபரம்பரை; காவிரிப்பூம்பட்டினம், உறையூர், ஆவூர் ... முதலிய நகரங்களைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட சோழ அரசபரம்பரை; வஞ்சி, கருவூர்... முதலிய நகரங்களைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட சேர அரசபரம்பரை ஆகிய மூன்று பரம்பரைக்குமுரிய பேரரசர் (Emperors; வேந்தர்கள்)களும், எண்ணற்ற குறுநில மன்னர்களும் (Dukes), பெருநிலக் கிழார்களும் (Barons = landlords) வாழ்ந்து வந்துள்ளனர். இவர்களைக் 'கி.மு' வில் வாழ்ந்தவர், கி.பி யில் (B.C&A.D) வாழ்ந்தவர் என்று பகுத்தறிந்துள்ளனர்.

இந்த நாலாவது உகத்தில் தோன்றிட்ட புலவர் பெருமக்களில் தலைமையானவராகவும், முதன்மையானவரகவும், சிறந்தவராகவும், இலக்கிய உலகில் தமிழர் வாழ்வியலுக்கு முழுவடிவம் கொடுத்தவராகவும், உலகிலுள்ள எல்லா மானிடரும் ஏற்றுச் செயல்படுத்திப் பயன்பெறக் கூடிய கருத்துக்கள் மிகுந்த ஓர் ஒப்புயர்வற்ற நூலை (திருக்குறள்) எழுதியவராகவும்; தமிழ்ச் சமுதாயம், தமது காலக்கணக்கையே இவரின் பெயரால் கொண்டிடும் அளவுக்கு எல்லாத் தமிழர் நெஞ்சத்தும் சிந்தையிடத்தும் நிறைந்தவராகவும் உள்ள வான்புகழ் கொண்ட பெரும்புலவர் திருவள்ளுவர் எனப்படுவார். இவர், தமிழ்ச் சமுதாயம் கொண்டிருந்த உயரிய பண்பு நலன்களைத்

தெளிவாகச் சுட்டிக் காட்டுவதோடு; உலகிலுள்ள மக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் அன்பும், பண்பும், பற்றும், பாசமும், தோழமையும் கொண்டு அமைதியும் நிறைவும் மகிழ்ச்சியும் மிக்க வாழ்வு வாழ்வதற்குரிய வழிமுறைகளையும், நன்கு சுட்டிக் காட்டுகின்றூர்.

இவருடைய நூல் ஒன்றேமுக்கால் அடி அளவுள்ள தனித்தனிக் குறட்பாக்களால் ஆனது. இக்குறட்பாக்கள் ஒவ்வொரு தலைப்பின் கீழும் பத்துப்பாக்கள் என்ற முறையில் நூற்று முப்பத்து மூன்று (133) பகுப்புகளாகப் (அதிகாரங்கள்) பகுக்கப்பட்டுள்ளன. ஆக 'திருக்குறளில்' ஆயிரத்து முந்நூற்று முப்பது (1330) குறட்பாக்கள் உள்ளன. இவை மூன்று பெரும் பகுப்புக்களாக 'அறத்துப்பால்', 'பொருட்பால்', 'காமத்துப்பால்' என்று பகுக்கப்பட்டுள்ளன. இப்பகுப்பு மனித வாழ்வின் ஒவ்வொரு உணர்வும், கருத்தும், சொல்லும், செயலும், முயற்சியும், அறநெறியின் அடிப்படையிலேயே நிகழ வேண்டுமென்ற பெரும் தத்துவத்தையும்; அறநெறிவழியில் வாழ்பவர் பொருளீட்டும் முயற்சியின்றி, 'எல்லாம் முன் வினைப்பயன்', 'மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான்', கொடுத்து வைத்தால் கிடைக்கும்', 'அவரவர் ஓகப்படிதான் எல்லாம் நடக்கும்', 'விதிப்படி எல்லாம் நடக்கும்', என்பன போன்ற கருத்துக்களைத் துணையாகக் கொண்டு சோம்பித் திரிந்திடலாகாது என்பதால்; 'அறநெறியில்' நம்பிக்கையும், பற்றும், பிடிப்பும் உள்ளவர்கள் பொருளீட்டுவதில் மிகுந்து ஆர்வம் காட்டிடல் வேண்டும் என்ற பெரும் தத்துவத்தையும், அறவழியில் நின்று ஈட்டிய பொருளால்தான் நிலையான, நிறைவான இன்பத்தைப் பெற்றிட முடியும் என்ற தத்துவத்தையும் விளக்கவே ('அறத்துப்பால்', 'பொருட்பால்', 'காமத்துப்பால்') ஏற்படுத்தப்பட்டது.

இத்தகு சிறந்த புலமைக்குரிய திருவள்ளுவர் தோன்றிய காலத்தை, அவரது பெயரால் தமிழகத்தில் வழக்கிலுள்ள ஆண்டுக்கணக்கை 'வள்ளுவர் ஆண்டு' (Valluvar Era) அடிப்படையாகக் கொண்டு பார்த்தால்; (1969 இல் வள்ளுவர் ஆண்டு 2000-ம் என்ற நிறைவைப் பெறுகிறது) திருவள்ளுவர் இன்றைக்கு இரண்டாயிரம் (2000) ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியிருக்கின்றூர் என்ற உண்மை தெளிவாகப் புலனுகின்றது. எனவே, இந்த நாலாவது உகத்தைப் (The Fourth Era) பற்றிய செய்திகளை வள்ளுவருக்கு முன், வள்ளுவருக்குப் பின் என்ற எல்லை வரையறை வைத்துக் கொண்டு ஆராய்தல் நன்று.

இன்று கிடைத்துள்ள நாலாவது தமிழ்ச் சங்க நூல்கள் (Literature of The Fourth Tamil Sangam) 'பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும்' சேர்ந்த 'பதினெண்மேல் கணக்கு நூல்கள்' என்பவையும் 'பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள்' என்பனவுமாகும்.

இந்த முப்பத்தாறு நூல்களும் மூன்ருவது சங்கத்திலிருந்த 'தொல்காப்பியம்' என்ற இலக்கண நூலுக்குப் பிறகு தோன்றியவை என்பதைப் பல 'புதிய சொற்கள்', 'சொல்லாட்சி', 'கருத்து' ... முதலியவைகளால் தெளிவாக உணர முடிகின்றது. இருந்தாலும், இந்த முப்பத்தாறு இலக்கியங்களுக்கும் தொல்காப்பியமே முழுமுதல் இலக்கணநூலாக இருந்திட்டது. இந்திய இலக்கியங்கள் பிறந்த கால இடைவெளியை நாலாவது உகத்தின் ஆரம்பத்திலிருந்து கி.பி முதலாம் நூற்ருண்டுத் துவக்கம் வரை சொல்லலாம். இந்த நூல்களுள் பாடல் பாடிய புலவர்கள் எழுநூற்றுக்கும் (700) மேற்பட்டவர்கள். இப்புலவர்களால், பாடப்பட்ட பேரரசர்களும் சிற்றரசர்களும் ஏறத்தாழ முந்நூறுக்கும் (300) மேற்பட்டவர்கள். இந்தப் புலவர்களும் அரசர்களும் பல்வேறு காலங்களில் வாழ்ந்தவர்கள் என்பதைத் தெளிவாக உணரமுடிகின்றது என்பதால் இவ்வரசர்களும் புலவர்களும் வாழ்ந்திட்ட கால இடைவெளி சுமார் 3000 (மூவாயிரம்) ஆண்டுகளாக இருக்கலாம். இதற்குக் குறைவாக இருக்க முடியாது; ஆனுல், கூடுதலாக இருக்கலாம். இந்த மூவாயிரம் ஆண்டுக்கால எல்லையில்தான் திருவள்ளுவர் தோன்றித் திருக்குறள் இயற்றியிருக்க வேண்டும்.

... ... ...

சோழப் பேரரசன் முதலாம் இராசராசன், நாடெங்கும் திறமை மிக்கவர்களை அனுப்பிப் பத்திப் பாடல்களைத் (Sacred verses) தொகுக்கும் முயற்சியினைப் பெருமளவில் செயலாக்கினான். அதன் விளைவாகத் தில்லையில் (சிதம்பரம், தென்னாற்காடு மாவட்டம்) மூவர் பாடிய தேவாரப் பாடல்களும் (திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர்) சேர்த்து வைக்கப் பட்டிருக்கும் செய்தி கிடைத்து அங்கு சென்று கருங்கல் அறைக்குள்ளிருந்த ஏடுகளைப் பெற்றான். அப்படிப் பெற்ற ஏடுகளில் பெரும்பாலானவை செல்லரிக்கப்பட்டு அழிந்திருந்தன. அதற்காகப் பெரிதும் வருந்திய மன்னன், நாட்டிலுள்ள எல்லாப் பத்திப் பாடல்களையும் தொகுக்குமாறு திருநாரையூர் நம்பியாண்டார் நம்பியைக் கேட்டுக் கொண்டார்.

திருநாரையூர் நம்பியாண்டார் நம்பிகள், இறைவன் புகழ்பாடும் மாலைகளான (தேவ + ஆரம் = இறைவன் + மாலை) தேவாரப் பாடல்கள் முன்பு எவ்வளவு இருந்தன; தமக்கு எவ்வளவு கிடைத்தன என்பதை வேதனையோடு குறிக்கின்றார்.

திருநாவுக்கரசர்: ‘கூற்றாயின’ எனத் தொடங்கும் தேவாரம் முதல் ‘ஒரு மானைத் தரிக்கும்’ எனத் தொடங்கும் தேவாரம் ஈறாக நாற்பத்தொன்பதாயிரம் (49000) தேவாரப் பாடல்கள் பாடினார் என்றும்; ஆனால் தமக்கு முன்னூற்றுப் பன்னிரண்டு (312) தேவாரங்களே கிடைத்தன என்று குறிக்கின்றார்.

திருஞான சம்பந்தர்: ‘தோடுடைய செவியன்’ எனத் தொடங்கும் தேவாரம் முதல் ‘கல்லூர்’ எனத் தொடங்கும் தேவாரம் ஈறாகப் பதினாறாயிரம் (16000) தேவாரப் பாடல்கள் பாடினார் என்றும்; ஆனால், தமக்கு முன்னூற்று எண்பத்து நான்கு (384) தேவாரங்களே கிடைத்தன என்றும் குறிக்கின்றார்.

சுந்தரமூர்த்தி: ‘பித்தா’ எனத் தொடங்கும் தேவாரம் முதல் ‘ஊழிதோறும்’ எனத் தொடங்கும் தேவாரம் ஈறாக முப்பத்தெண்ணாயிரம்(38000) தேவாரப் பாடல்கள் பாடினார் என்றும்; ஆனால், தமக்கு நூறு (100) தேவாரங்களே கிடைத்தன என்றும் குறிக்கின்றார்.

இவ்வாறு மூவராலும் பாடப்பட்ட மொத்தத் தேவாரங்கள் (49,000+16,000+38,000=103,000) ஓர் இலக்கத்து மூவாயிரம் என்றும்; அவற்றுள் அழியாமல் கிடைத்த தேவாரங்கள் (312+384+100 = 796) எழுநூற்றுத் தொண்ணூற்றாறு என்றும் தெளிவாகக் குறிக்கப்படுகின்றது. இக்குறிப்பினைத் தரும் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பியும், முதலாம் இராசராசனும் தங்களுக்கு எல்லாத் தேவாரப் பாடல்களும் கிடைக்காமல் போயினவே என்று வருந்திய காலத்து இறைவன் வானொலிய (அசரீரி) “ஈண்டு வேண்டுவன வைத்தே மண் மூடச் செய்தோம்” என்று கூறி இவர்களின் ஏக்கத்தையும் ஏமாற்றத்தையும் நீக்கியருளினார்.

திருநாரையூர் நம்பியாண்டார் நம்பிகளின் தலைமையில் நாடெங்குமுள்ள பத்திப் பாடல்கள் ஒன்று திரட்டப்பட்டன. அப்படித் திரட்டப்பட்ட பத்திப் பாடல்கள் ‘திருமுறைகள்’ [அழகிய ஏற்பாடுகள்] எனப் பெயரிடப்பட்டு வரிசைப் படுத்தப்பட்டன.

இறைவன் அருளைப் பெற்ற ‘தேவார ஆசிரியர் மூவரும்’ ‘அப்பர்’ (கி.பி. 580-650) ‘திருஞானசம்பந்தர்’ (கி.பி 6-7 ஆம் நூற்றாண்டு) ‘சுந்தரர்’ (கி.பி.840-865 ஒன்பதாம் நூற்றாண்டு) மாணிக்க வாசகருக்கு ஐந்நூறு (500) ஆண்டுகளுக்குப் பிறகு தோன்றியவர்கள். அதாவது பாண்டிய நாடு கண்ணகியால் அழிந்து, சீர்கெட்டுத் தடுமாறிய நிலையில்; (கி.மு.1 ஆம் நூற்றாண்டு) மதுரையை ஆண்டிடுபவர்கள் அடிக்கடி மாற நேரிட்டது. அது போழ்து, வடக்கிருந்து ‘களப்பிரர்’ 1. கங்கவாடி நாட்டையும் (மைசூர் மாநிலம்) 2. இரட்டபாடி நாட்டையும் (ஆந்திர மாநிலம்) 3. நுளம்பபாடி நாட்டை (தற்போதைய சேலம், வட ஆற்காடு, பெல்லாரி, கோலார், தும்கூர் ஆகிய மாவட்டங்கள்)... கைப்பற்றி வெற்றி முரசு கொட்டியபடி சோழ நாட்டினுள் நுழைந்து கொண்டிருந்த நேரம். அதனால்தான், அவர்களை எதிர்க்கப் பெரும்படை திரட்டப் பாண்டிய மன்னன் குதிரைகள் வாங்குவதற்காக மந்திரியாக இருந்த மாணிக்கவாசகப் பெருமானைக் கீழைக் கடற்கரையில் உள்ள துறைமுகப் பட்டினங்களுக்குச் சென்று

குதிரைகள் வாங்கி வர அனுப்பினான். அப்பொழுதுதான், அவர், வழியில் 'திருப்பெருந்துறை' எனும் ஊரில் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டார். இவர் திருப்பெருந்துறையில் கட்டிய கோவில் தேவார ஆசிரியர்கள் காலத்தில் சிறந்து விளங்கியதே; இவர் தேவார ஆசிரியர்களுக்கு முந்தியவர் என்பதை விளக்கும்.

'திருவாதவூரர்' எனப்படும் 'மாணிக்கவாசகப் பெருமான்' புத்த மதகுருவை வாதில் வென்றார் என்ற செய்தியை நோக்கும் போது; தேவார ஆசிரியர்களில் திருநாவுக்கரசரும், திருஞான சம்பந்தரும் சமணருடன் போரிட நேர்ந்ததே தவிரப் புத்தரோடு போரிட நேரவில்லை என்ற கருத்தை நினைவில் கொள்ள வேண்டும். அதாவது, 'மணிமேகலைக் காப்பியம்' எழுந்திட்ட கி.பி. முதலாம் நூற்றாண்டிலிருந்த புத்தமதச் செல்வாக்கினை முழுதும் அழித்தவர் மாணிக்க வாசகரே ஆவார். இவர் காலத்தில் சமண சமயம் செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை. அப்படிச் சமண சமயம் செல்வாக்குப் பெற்றிருக்குமே யானால், மாணிக்கவாசக அடிகள், அதனுடனும் போரிட்டு வென்றிருப்பார், எனவே, சமண சமய எழுச்சிக்கு முன்னரே வாழ்ந்தவர் மாணிக்கவாசக அடிகள் என்பது தெளிவாகிறது.

ஈண்டு, தமிழால் இறைவனைக் கண்டு; வேற்று மதங்களான 'புத்தமதம்', 'சமணமதம்' முதலியவற்றுடன் போரிட்ட நாயன்மார்களும், சமயக் குரவர்களும், ஆழ்வார்களும், சந்தானக் குரவர்களும் ஏன், வடமொழியைத் தாய்மொழியாக உடைய 'வடஆரியர்'களை எதிர்த்துப் போராடவில்லை *('ஆரியர்' என்றால் உயர்ந்தவர், சிறந்தவர், தலைவர், அரசர், அந்தணர்.. முதலிய பொருள்கள் தமிழில் உண்டு. அன்றைய தமிழ்ச் சமுதாயத்தில் பாரம்பரியமாகச் சான்றோர்கள் தோன்றிய குடியினரை 'ஆரியர்' என்றழைக்கும் வழக்கம் இருந்தது. அதனால்தான், தமிழ்நாட்டில் சிறந்தவர்களாக இருந்த தமிழ் ஆரியர்களினின்றும் வேறுபடுத்திக் காட்ட 'வடவாரியர்' என்ற சொல் பண்தொட்டே கையாளப்பட்டு வந்திருக்கின்றது)* என்பதைப் எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கின்றது.

இப்படி எண்ணிப் பார்க்கும் போதுதான், 'புத்தம்', 'சமணம்' ஆகிய இரு மதங்களும் தங்களுக்கெனத் தனியான கடவுளையும், கோயிலையும், சமய நெறியினையும், ஒழுகலாறுகளையும், நம்பிக்கைகளையும், பெற்றிருந்த காரணத்தால்தான் அவற்றை நேரடியாக எதிர்த்து ஒழிக்க வேண்டியிருந்தது; ஒழிக்கவும் முடிந்தது. ஆனால், வடவாரியர், தங்களின் புராணப் பொய்களையும், அறிவுக்குப் பொருந்தாத கற்பனைக் கதைகளையும்; தமிழரின் 'சித்தர் நெறிகளுடன்' (Siddha Philosophy) இரண்டறக் கலக்க விட்டனர்; அத்துடன், வடவாரியர், மிகத் தந்திரமாகத் தமிழரின் கோவில்களிலேயே தாங்களும் வழிபட்டனர்; இதன்மூலம், தங்கள் மொழியான 'வடமொழி'(Sanskirit)யைத் தமிழரின் சமய மொழியாக (Religious Language)வும்; தமிழர் சமுதாயத்தில் பிறப்பு (Birth), பூப்பு (Maturity), திருமணம் (Marriage), இறப்பு (Death) முதலியவைகளுக்கு எல்லாச் சடங்குகளையும் (rituals & ceremonies) தாங்களே முன்னின்று நடத்தும் குருமார்களாக(priests & monks)வும் ஆக்கிக் கொண்டுவிட்டனர்.

இப்படித் தமிழ்ச் சமுதாயத்தில் இரண்டறக் கலந்து 'வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல்', 'மலைப்பாம்பு தன் இரையை விழுங்குவது போல்', 'குடிகாரனிடத்துத் திருடுவது போல்' வடவாரியர் செயல்பட்டுத் தமிழரின் சித்தர்நெறியைச் செத்த நெறியாக (Dead philosophy) ஆக்க முற்பட்டனர். ஆனால், சித்தர்நெறியின் உண்மையும் நுண்மையும் திண்மையும் வடவாரியரை முற்றிலும் மாற்றமடையச் செய்து தமிழர்களாகவே ஆக்கிற்று. அதனால்தான் 'சங்கராச்சாரியார்' மிகவும் வலிதின் முயன்று 'ஆரிய நெறியை', 'ஆரிய மொழியை', ஆரிய வேதங்களை' மீண்டும் உயிர்ப்பித்து "ஆரியர்கள், திராவிட தெய்வமான 'சிவலிங்க' வழிபாடு செய்யக்கூடாது; ஆரியர்கள், தாங்களே கடவுள் (பிர்மம்) என்றுணர்ந்து; கோவில் வழிபாட்டைக் கைவிடல் வேண்டும்" என்ற கொள்கையைப் (அத்வைதம்) பரப்பினார்.

தமிழர் நெறியின் வித்தாக 'இராமானுசர்' தோன்றி; சங்கரரின் 'ஆரியக் கொள்கை'யையும், 'மாயாவாதத்தையும்', 'கோவில் வழிபாட்டு

எதிர்ப்பையும்' குழி தோண்டிப் புதைத்தார். தமிழால் கோவில்பூசையும், இறை வழிபாடும் செய்தலே சிறந்தது என்பதை நிலைநாட்டிய பெருமை, 'உடையவர்' என்று போற்றப்படும் 'திரு இராமானுச அடிகளார்'க்கே உரியதாகும், இன்றும் சித்தர் மரபினர் வைணவப் (கடவுள் மறுப்புக் கொள்கையில் ஓரளவு பிடிப்புக் கொண்டிருந்த என் தந்தை உட்பட; சைவநெறியில் பெருத்த ஈடுபாடுடையவனாக உள்ள நான் உட்பட திரு இராமானுசரைப் பூசைக்காலத்து வாழ்த்தி வணங்கும் பழக்கம் இருந்து வருகின்றது) பெரியாரான திரு இராமானுசரை வழிபடுகின்றனர்.

அன்பு நண்ப! ஆரியநெறிக் கலப்பைச் சங்கரர் பிரித்துத் தனிமைப் படுத்திக் (differentiated) காட்டிட்ட காரணத்தால்தான்; ஆரியத்தால், தமிழர் சமயமான 'சித்தர் நெறியை' எப்படிச் சமாளிக்க முடிந்தது என்ற பேருண்மைகள் தெளிவாக விளங்கின. இது பற்றிய, என் கருத்துக்களை, நமது நண்பர்கள், 'எனக்கு இனவெறியும், மொழிவெறியும், குறுகிய நோக்கும்' இருப்பதாகக் குறைகூறப் பயன்படுத்துகிறார்கள். நான், அவர்களின் குறுகிய அற்ப உணர்வுகளுக்காக இரக்கப்படுகிறேன். 'கரையான் புற்றுக் கட்டக் கருநாகம் குடியேறியது' போல்; என் முன்னோர்கள் ஈன்றெடுத்த தத்துவங்களையும், தோற்றுவித்த தெய்வீகக் கலைகளையும், கட்டி முடித்த கோவில்களையும் சிதைத்து, சீரழித்து, உருக்குலைத்து, பயனற்றதாக்கி மறைந்து கிடக்கச் செய்திட்டவர்களைப் பற்றி நான் கூறக் கூடாதா? என் காலத்தில், தமிழ்ச் சமுதாயம், மீண்டும் தன் இனப்பெருமைக்கும், நல்வாழ்வுக்கும், உயர்வுக்கும் வழிகண்ட சித்தர்களின் கொள்கைகளையும் செயல்களையும் உணர்ந்தேயாக வேண்டுமாதலால்; நான், எப்படியெப்படித் தமிழர் ஏமாற்றப்பட்டனர், அழிக்கப்பட்டனர், ஒழிக்கப்பட்டனர் என்பதைக் கூறாமல் இருக்க முடியுமா?

நண்பா! என்றோ, 'வடவாரியர்' செய்த அழிவுகளுக்காக, இழிவுகளுக்காக, சூழ்ச்சிகளுக்காக, ஏமாற்றுக்களுக்காக இன்றுள்ள யாரையேனும் நான் குறை கூறினால், பழி வாங்க நினைத்தால் அது தவறுதான், ஆனால், 'நான் கடந்த கால வரலாற்றின் நெளிவு சுழிவுகளைக் கூறுவது தவறு' என்று கூறுவதை எப்படி என்னால் ஏற்றுக் கொள்ள முடியும்?

அன்பு நண்ப! திரு இராமானுசரைச் சித்தர் மரபினர் வழிபடுவதுபோல் மாணிக்கவாசகரையும் சித்தர்கள் வழிபடுகின்றனர் என்பதால்தான்; மணிவாசகர் பெருமை கூறுமிடத்துத் தமிழர் சமயம் பற்றிச் சில கூற நேரிட்டது.

... ... ... ...



**"இத் திருநாடு மறைத்ததால், மறைந்தவைகளும், மறுத்ததால் மறக்கப் பட்டவைகளும் இறந்தொழியவில்லை என்பதற்குச் சான்றே நான்."**

**"விண்ணும் மண்ணும் பின்னிப் பிணைந்துள்ள இணைப்பை விளக்குவதே என் முயற்சி."**

**குவலய குருபீடம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி**
**ஞாலகுரு சித்தர் அரசயோகி கருவூரர்**

அன்பு நண்ப! நமது தமிழ் இனத்தவர், தங்களின் முன்னோர்களை மறக்க முற்பட்டதன் விளைவுதான்; இன்றைக்கு, உலகத்தவர் 'தமிழ்நாடு' என்று ஒன்றுண்டு; அங்கு, தமிழர் என்ற இனத்தவர் வாழுகின்றார்கள்; அவர்களின் மொழி தமிழ்மொழி; அவர்களுடைய நாகரிமும் பண்பாடும் மொழியும் உலகில் தோன்றிட்ட எல்லா நாகரிகங்களுக்கும் பண்பாடுகளுக்கும் மொழிகளுக்கும் தாயாக இருந்து வருகின்றது. மனித உடல் கூறுகளும், தோற்றங்களும் பெருமளவில் ஒத்திருந்தாலும்; உலக மக்களைத் தமிழர் (திராவிடர்), மங்கோலியர், ஐரோப்பியர், ஆப்பிரிக்கர், ஆரியர் ... என்று இனங்களாகப் பிரித்துக் காட்டக் கூடிய அளவு வேறுபாடுகள் பல இருக்கின்றன. இதனால், 'மனிதன் உலகின் ஒரே பாகத்தில்தான் தோன்றினான்' என்ற கருத்தைவிட; விலங்கினங்களும் பறவைகளும் மற்ற உயிரினங்களும் சிறுசிறு தோற்ற உருவ வேறுபாடுகளோடு உலகெங்கும் தோன்றியிருப்பது போல்; 'மனிதனும் உலகின் பல பாகங்களில் தோன்றியிருத்தல் வேண்டும்' என்ற கருத்துத்தான் அறிவியல் ஆராய்ச்சிகளுக்கு ஏற்றதாக இருக்கிறது. இக் கருத்துதான், 'அந்தந்த இடங்களில் தோன்றிய மனித இனம்; தனக்குக் கிடைத்த இயற்கைச் சூழ்நிலைகளுக்கேற்ப முயன்று மொழியையும், நாகரிகத்தையும், பண்பாட்டையும் உருவாக்கிக் கொண்டது' என்ற கருத்துக்குச் சரியான விளக்க மளிக்கிறது.

மனித இனம் ஒரே இடத்தில் தோன்றிப் பிறகு உலகின் பல பாகங்களுக்குச் சென்றது என்ற கருத்து ஒப்புக் கொள்ளப்பட வேண்டுமானால்; 'மனித இனங்கள்' என்று வேறுபடுத்திக் காட்டக் கூடிய அளவு மனித உடலின் வண்ணமும் வடிவும் மாறுபட்டிருக்க முடியாது. அத்துடன், ஏன்? அல்லது எப்படி? மனிதனால் நானூறுக்கும் மேற்பட்ட மொழிகள் உண்டாக்கப்பட்டன என்ற வினாவிற்கு விடையே சொல்ல முடியாது? ஒரே இடத்தில் தோன்றிய மனித இனத்தின் உடலும் வண்ணமும் மாற்றங்கள் பெற்றது எப்படி? ஒரே இடத்திலிருந்து ஒரே மொழி பேசிய மனிதர்கள்; பிரிந்து சென்ற இடங்களில் புதிய மொழிகளைத் தோற்றுவித்தது ஏன்? வாழ்வியல் நாகரிகங்களையும் பண்பாடுகளையும் மாற்றிக் கொண்டது ஏன்?

உலகில் தோன்றிய மனித இனங்களுள் நாகரிகத்தாலும் பண்பாட்டாலும் சிறந்து விளங்கிய இனம் 'தமிழ் இனம்'. இந்த இனம் காலத்தாலும் மிக மிகப் பழமையுடையது. இதனை,

**"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு**
**முன் தோன்றி மூத்த குடி"**

என்ற வரிகள் விளக்குகின்றன.

இப்படிப்பட்ட தொன்மையும், பழமையும், சிறப்பும் படைத்திட்ட தமிழினம் உலகெங்கும் வாணிபத்தின் பொருட்டுச் சென்று வந்திட்டது என்பதற்குரிய சான்றுகள் இலக்கிய ஏடுகளிலும், வரலாற்று ஏடுகளிலும், புதைபொருள் ஆய்வுகளிலும் நிறையக் கிடைத்துள்ளன. இருந்தும், ஏன், நம் தமிழின நாகரிகமும், பண்பாடும், மொழியும், பிறநாடுகளில் வேரூன்றிக் கிளைத்துச் செழித்து வளர்ந்தோங்கி நிலையாகிடவில்லை?

தமிழர்கள், தங்களைப் பற்றித் தாழ்வு மனப்பான்மை மிகுதியாக உடையவர்கள். இதை, 'அவையடக்கம்', தன்னடக்கம்', 'தற்புகழ்ச்சியின்மை' என்ற சொற்களால் பெருமைக்குரியதாக்கி வந்தனர். அதனால்தான், கடல் கடந்து உலகெல்லாம் சென்ற தமிழர்கள் தங்களின் மொழியைப் பரப்பவோ! தங்கள் நாகரிகத்தையும் பண்பாட்டையும் பரப்பவோ! தயங்கித் தவறு செய்தனர். தமிழர்களின் இந்தத் தயக்கம்தான், காலப்போக்கில் தமிழ்மொழியும், தமிழ்நாகரிகமும், தமிழ்பண்பாடும் பிற நாடுகளில் பரவித் தமிழினத்தின் அருமை பெருமைகள் உலகத்தால் உணரப்படாமல் செய்திட்டது. அத்துடன், இதே தயக்கம்தான், பிறநாட்டார் தங்களின் மொழியையும், நாகரிகத்தையும், பண்பாட்டையும் தமிழகத்துக்குள் புகுத்திச் செல்வாக்குப் பெறச் செய்யவும்; முடிந்த அளவு தமிழினத்தாரின் தனித்தன்மைகளையும், அருமை பெருமைகளையும் இழித்துப் பழித்துச் செயல்பட்டு முடிவில் அழிவுவேலையிலும் ஈடுபடும் சீர்கேட்டை விளைவித்தது.

தமிழர்கள், தங்களுக்குரிய அளப்பரிய பொறுமையாலும்; அளவுக்கதிகமாகப் பிறரை மதிக்கும் பண்பாலும்; புதியனவற்றை விரைந்து வரவேற்றுப் போற்றிப் பயன்படுத்திடும் கலையுணர்வாலும் கெட்டார்கள், அதாவது, தமிழர்களின் உயரிய பரந்த மனப்பான்மையை ஏமாளித்தனம் என்றெண்ணிய பிறநாட்டார்; மிக எளிதில் தமிழர்களுடைய பாரம்பரியப் பெருமைகளையும், நம்பிக்கைகளையும், கொள்கைகளையும், ஒழுகலாறுகளையும், சமுதாய அமைப்புக்களையும், இனக் கட்டுக்கோப்புகளையும், மொழியுணர்வையும், நாட்டுப் பற்றையும் தாக்கித் தகர்த்துச் சிதைத்துச் சீரழித்திட்டனர்.

'எல்லாம் வல்லதாய்'! 'எங்கும் நிறைந்ததாய்' எல்லாமாய் இருக்கக் கூடிய பரம்பொருள்; இந்த மண்ணுலகில் தமிழனாய்ப் பிறந்தும், தமிழனாய் இருந்தும் தொடர்ந்து செயல்பட்டு வருகின்ற காரணத்தால்தான் 'தமிழ்மொழி' 'தமிழ்நாடு', 'தமிழ் இனம்' ... என்பவை வெறும் வரலாற்றுச் சொற்களாகவோ, அகராதிச் சொற்களாகவோ, இலக்கியச் சொற்களாகவோ மாறிடாமல்; என்றென்றைக்கும் வாழுகின்ற பொருட் சான்றுடைய சொற்களாக இருக்கின்றன. அதாவது, உலகில் தோன்றிட்ட எண்ணற்ற மனித 'இனங்கள்' 'மொழிகள்', 'நாடுகள்' ... முதலியவை இருந்த அடிச்சுவடே தெரியாமல் முற்றிலும் அழிந்து போயிருக்கின்றன. அவற்றைப் பற்றிய விவரங்களை வரலாற்று ஏடுகளிலோ, அகராதிகளிலோ, இலக்கியங்களிலோதான் காண முடிகின்றது. இந்த 'இழிநிலை', 'அழிநிலை' ... தமிழர்க்கோ, தமிழ்மொழிக்கோ, தமிழ்நாட்டுக்கோ ஏற்படாதது தெய்வீக சத்தியால்தான்.

பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புக்களும், நவகோடி சித்தர்களும், முப்பத்து முக்கோடி தேவர்களும், ஆயிரம் கோடி தேவதைகளும், நாற்பத்தெண்ணாயிரம் கோடி இருடிகளும், எண்ணிலடங்காத பத்தர்களும், புத்தர்களும், போத்தர்களும், முத்தர்களும், சீவன் முத்தர்களும், சித்தியார்களும், நான்மறைச் சித்தர்களும் (தவ சித்தர்கள், வேத சித்தர்கள், வேள்விச் சித்தர்கள், ஞான சித்தர்கள்) ... நேரடியாகத் தமிழ்நாட்டில்தான் தோன்றினார்கள், தமிழ்தான் பேசினார்கள், தமிழர்களாகத்தான் வாழ்ந்தார்கள். அதனால்தான், 'நிலநடுக்கம்', 'கடல்கோள்கள்', 'கடும்மழை', 'பெரும்புயல்', 'கொடியநெருப்பு' ... முதலிய இயற்கை சத்திகளின் அழிவு வேலைகளை வென்று என்றும் நின்று நிலவுவதாகக் 'தமிழரும்', தமிழும்', 'தமிழ்நாடும்' உள்ளன. இயற்கையின் கொடிய அழிவுச் சத்திகளாலேயே அழிக்க முடியாத 'தமிழை', 'தமிழரை', 'தமிழ்நாட்டை' மானுடர்களின் அளவுக்குட்பட்ட சூழ்ச்சிகளும், ஆட்சிகளுமா அழித்திட முடியும்?

தெய்வங்கள், கடவுள்கள், இறைகள், தேவர்கள், அமரர்கள், சித்தர்கள் ... முதலியோர் தாங்கள் உலவிடும் 1008 ஆயிரத்தெட்டு உலகங்களுள் ஒன்றழியப் புதிதாக இவ்வுலகம் உண்டானது என்பதால் பெருமகிழ்வும் பேரார்வமும் கொண்டு; இவ்வுலகில் முதன் முதல் மானிடர் தோன்றிய நிலமாம் குமரிக்கண்டத்துத் (lemuria) தாங்களும் நேரடியாக மானுட வடிவில் தோன்றினர். இதனையே சிவபெருமான் பாண்டிய அரசின் (பண்டைய அரசு = பழைய அரசு = முதன் முதல் தோன்றிய அரசு) முதல் வேந்தனாக அரசுகட்டிலில் அமர்ந்தான் என்பர்.

இப்படிப் பாராண்ட பைந்தமிழர் பரம்பரையுள் பரம்பொருள் அவதாரம் எடுத்த பேருண்மையை, பெருஞ்சிறப்பைப் பாரெல்லாம் அறிந்திடச் செய்யாத பாவியராய் மாறிய தமிழரை என்னென்று சொல்வது? ஏனோ, தமிழர் தமது தொன்மையை, பழமையை, தெய்வீகச் சிறப்பை, ஒப்புமையற்ற பேராற்றலை மறந்தும், மறைத்தும், குறைத்தும் மதிகெட்டு வாழ்ந்திட்டனர். ... ...

*[... ... தொடர்ச்சி அடுத்த இதழில்]*

